දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. .........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ED/03/40/1/1/5

දිනය / திகதி / Date 04.04.2014

**சுற்றறிக்கை இலக்கம் : 04/2014**

சகல மாகாணப் பிரதம செயலாளர்கள்

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்

பரீட்சை ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்

சகல பிரிவெனாப் பொறுப்பாளர்கள்

**<u>இலங்கையின் பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அரச அங்கீகரிக்கப்பட்ட ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் உள்நாட்டுப் பாடநெறிகளைத் தொடர்வதற்காகக் கற்கை விடுமுறையைப் பெற்றுக்கொள்ளல்.</u>**

மேற்கூறப்பட்ட தொனிப்பொருளிற்கமைய 2013.06.07 ஆந் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 26/2013 தொடர்பில் தங்களது கவனத்தை ஏற்க செய்கிறேன். அச் சுற்றறிக்கையின் 4ஆம் வாசகம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு மறுசீரமைக்கப்படுகின்றது.

**4. வார இறுதிப் பாடநெறிக்காக கடமைப் பொருட்டு விடுமுறை வழங்கல்**

4.1 வார இறுதிப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியைத் தொடரும் உத்தியோகத்தர்கள்/ ஆசிரியர்களுக்கு மாத்திரம் பங்கேற்பினை உறுதி செய்ததன் பின்னர் அப் பாடநெறி நடைபெறும் வார இறுதி நாட்களின் முன்னைய தினமான வெள்ளிக்கிழமை அல்லது பின்னைய தினமான திங்கட்கிழமை ஆகிய இரண்டில் ஒரு தினதுக்கு கடமைப் பொருட்டு விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

4.2 பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியை தவிர ஏனைய கற்கைப் பாடநெறிகளுக்காக வார இறுதியில் பங்கேற்போருக்கு சேவை இடத்தில் இருந்து கல்வி மத்திய நிலையத்திற்கு உள்ள தூரம் 50km ஆக அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் அவ் உத்தியோகத்தாகள் / ஆசிரியர்கள் வார இறுதிக்கு முன்னைய தினமான வெள்ளிக்கிழமை அல்லது பின்னைய தினமான திங்கட்கிழமை என்ற அடிப்படையில் ஒரு நாள் (1) கடமைப் பொருட்டு விடுமுறையின் பங்கேற்பினை உறுதிப்படுத்தியதன் பின்னர் பெற்றுக் கொள்ள முடியும்.

4.3 மேற்கூறப்பட்ட 4.1 மற்றும் 4.2 இற்கமைய விடுமுறையைப் பெற்றுக்கொள்வதற்காக உரிமை பெறுவதற்கு வார இறுதியில் சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களில் பாட நெறிக்காகப் பங்கேற்றிருக்க வேண்டும். பாட நெறி நடைபெறுவது வார இறுதியில் ஒரு தினம் மாத்திரமாயின் அல்லது பாடநெறிக்காகப் பங்கேற்றது வார இறுதியில் ஒரு தினதிற்காக மாத்திரமாயின் மேற்கூறப்பட்ட விடுமுறை உரித்தற்றதாகும். .

4.4 பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியைத் தொடரும், தமது சேவை இடம் பாடசாலை அல்லாத இலங்கை கல்வி நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு மற்றும் இலங்கை கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு இப் பாட நெறியின் பிரயோக கற்கை கட்டத்திற்காக பத்து (10) வார உயர்ந்த பட்சத்தின் கீழ் கற்கை விடுமுறையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதிகள் இவ் மறுசீரமைக்கப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்ட தினம் தொடக்கம் அமுலில் இருப்பதுடன், இதற்கமைய கற்கை விடுமுறைகளை அல்லது கடமைப் பொருட்டு விடுமுறையினை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவாய் அறியத்தருகின்றேன்.

அனுர திசாநாயக்க
செயலாளர்

2014.04. 07
கல்வி அமைச்சு
இசுருபாய,
பத்தரமுல்ல.

**பிரதிகள்:**

1. அரச அங்கீகாரம் பெற்ற சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள்
2. கணக்காய்வாளர்
3. மாகாண ஆளுனரின் செயலாளர்
4. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
5. கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள்
6. பிரதம ஆணையாளரின் ஆசிரியக் கல்வி
7. கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர்கள்
8. கணக்காளர்கள்
9. தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதிகள்
10. ஆசிரியக் கல்லூரி அதிபர்கள்.